2010 ஏப்ரல் 30]

(ஈ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் கவனத்தைக் கவர்ந்திருக்கக்கூடிய சாத்தூர் அருகே நடைபெற்றிருக்கக்கூடிய தலைமைக் காவலருடைய. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்களும், நிறைய உறுப்பினர்களும் இதுசம்பந்தமாக அறிவிப்பு கொடுத்துள்ளீர்கள். அவை என்னுடைய ஆய்விலே இருக்கின்றன. அவற்றைப் பின்னால் பார்க்கலாம், உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

3. சிறப்புக் கவன ஈர்ப்பு

வால்பாறை, தோனிமுடி எஸ்டேட்டில் சிறுத்தைப் புலி தாக்கி சிறுவன் இறந்தது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 28–4–2010 அன்று வால்பாறையில் மணிசங்கர் என்கிற சிறுவனை சிறுத்தைப் புலி தாக்கியதில், அவன் இறந்தது குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக திரு. கோவை தங்கம் மற்றும் திரு. சி. ஞானசேகரன் ஆகியோர் விதி 56–ன்கீழ் அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். இதனை சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்கிறேன். இதுகுறித்து அறிவிப்புக் கொடுத்த உறுப்பினர்களில் யாரேனும் ஒருவர் சுருக்கமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம்.

திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை வால்பாறையில் சத்தியராஜ், முத்து, திருமதி தேவகி, ரம்யா, காயத்ரி, கௌசல்யா, முகேஸ்வரன், மணிசங்கர் ஆகிய 8 பேரை சிறுத்தைப் புலி அடித்துக் கொன்றிருக்கிறது. அங்கே தோனிமுடி என்கிற இடத்தில் கடந்த 4 மாதங்களில் 2 குழந்தைகளை அடித்துக் கொன்றுவிட்டது. 1–1–2010–இலே இதே இடத்திலே ஒரு குழந்தையை அடித்து, நான் இந்தப் பேரவையினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அய்யா அவர்களிடத்திலேகூட, கூண்டுகளை நிறைய வைக்க வேண்டுமென்று சொன்னேன். ஏற்பாடுகள் செய்யலாமென்று அறிவித்தார்கள். இப்போது அந்த தோனிமுடி என்ற இடத்திலே

[திரு. கோவை தங்கம்] [2010 ஏப்ரல் 30

மீண்டும் அந்த சிறுத்தைப் புலி சுற்றிச் சுற்றி வருகிறது. என்ன காரணமென்று கேட்டீர்களென்றால், அங்கே புதர்கள் நிறைய இருக்கின்றன. அது எஸ்டேட் இடங்கள். தெரு விளக்குகள் இல்லை. அதனால் இருட்டுக்குள்ளே வீட்டுக்கு முன்னால் 20 அடிக்கு முன்னாலேயே பதுங்கியிருக்கிறது. 4 மாதத்திற்கு முன்னால் இறந்த அந்த முகேஸ்வரன் என்கிற குழந்தையையும் வீட்டுக்கு 20 அடி முன்னால்தான் அந்த சிறுத்தைப் புலி அவனைப் பிடித்திருக்கிறது. 28 ஆம் தேதி இறந்த அந்தக் குழந்தையையும் வீட்டுக்கு 20 அடிக்கு முன்னாலேதான் பிடித்திருக்கிறது. இதற்கு நிரந்தரத் தீர்வு காண வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அரசுக்குத் தெரியும், நேற்று மதியம் 3–00 மணிக்கு வால்பாறையில் இருக்கிற மக்கள் மிகப் பெரிய மறியல் போராட்டம் நடத்தி, அங்கு பெரிய கொந்தளிப்பாக இருக்கிறது. பரபரப்பாக இருக்கிறது. என்ன காரணம் என்று கேட்டால், இன்னும் அங்கே சிறுத்தைப் புலி சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருக்கிறது. எந்த நேரத்தில் எந்தக் குழந்தையைப் பிடிக்குமோ என்று ஆத்திரத்திலும், கொந்தளிப்பிலும், பரபரப்பாகவும், வருத்தத்திலும் இருக்கிறார்கள். அதற்காக ஒரு நிரந்தரத் தீர்வு காணுவதற்கு இந்த அரசினுடைய கவனத்தை நான் ஈர்க்கின்றேன்.

முற்பகல் 10–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என். செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவருடைய வால்பாறை தொகுதியிலே இதைப்போல சிறுத்தைகளுடைய அட்டகாசம் அதிகம் இருப்பதாக குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்தப் பகுதி கிட்டத்தட்ட 958 சதுர கிலோ மீட்டரில் ஒரு சோலை forest–ஆக, மிகுந்த அடர்ந்த காடுகள் உள்ள பகுதியாகும். அது மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நன்றாகத் தெரியும். அது இந்திரா காந்தி தேசியப் பூங்காவாகவும், அதைப்போல யானைகள் சரணாலயமாகவும், 2008–லே புலிகளின் சரணாலயமாகவும், அறிவிக்கப்பட்டிருக்கின்றது. ஏனென்றால், புலிகள் சிறுத்தைகள் இருக்கின்ற காரணத்தால்தான் அது சரணாலயமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. எங்கள் துறையைப் பொறுத்தவரையில், அதைக் கட்டுப்படுத்துவதற்காகப் பல்வேறு

2010 ஏப்ரல் 30] [திரு. என். செல்வராஜ்]

முயற்சிகளை எடுத்துக்கொண்டிருக்கிறோம். சிறுத்தைப் புலிகளைப் பொறுத்தவரையில் எந்த வேலியையோ, எந்த அகழிகளையோ, எதைப் போட்டும் அதைத் தடுக்க முடியாது. சிறுத்தைகளைப் பொறுத்தவரையில், 10 அடி உயரம் என்றாலும் தாண்டுகின்ற ஆற்றல் பெற்றவை. எனவே, அவற்றைப் பிடிப்பதற்கு மிகப் பெரிய சிரமமாக இருக்கிறது. அவர் குறிப்பிட்டதைப்போல, அந்த முகேஸ்வரன் என்ற பையன் இந்த ஆண்டு ஜனவரி மாதம் 10 ஆம் தேதி, சிறுத்தைப் புலியால் அடிக்கப்பட்டிருக்கிறான். அதைப்போலவே, 28 ஆம் தேதி அங்கே கோயிலுக்குப் போய்விட்டுத் திரும்பியிருக்கிறார்கள். 10, 20 மாணவர்கள் சென்றிருக்கிறார்கள். அதிலே மணிசங்கர் என்ற பையனும், அவனுடைய தம்பியும் அந்தப் பகுதியிலே வந்துகொண்டிருக்கும்போது, அவன் கையில் வைத்துக் கொண்டிருந்த அந்தப் பிரசாதம் கீழே விழுந்திருக்கிறது,. விழுந்தவுடனே அதை எடுப்பதற்காகக் குனிந்த நேரத்தில், பக்கத்தில் பதுங்கியிருந்த அந்த சிறுத்தைப் புலி அந்தப் பையனை அடித்திருக்கிறது. சிறுத்தைகளைப் பொறுத்த அளவில் நாய் போன்ற 4 கால் மிருகங்களை வேட்டையாடுவதிலே ஆர்வம் கொண்டது. இந்தப் பையன் குனியும்போது 4 கால்களாகத் தெரிந்த காரணத்தால், அதுவரையில் 10, 15 பேர் அந்த வழியில் சென்றவர்களையெல்லாம் விட்டு, இந்தப் பையனை அடித்திருக்கிறது. அந்தப் பதட்டம் இருந்திருக்கிறது. உடனடியாக எங்கள் துறையினுடைய அதிகாரிகள் அவர்களுக்குள்ள விதிக்குட்பட்டு ரூபாய் 25,000 உடனே நிவாரணம் தருவதற்கு முயற்சி செய்திருக்கிறார்கள். அவர்கள் அதை மறுத்திருக்கிறார்கள். இன்று அது வழங்கப்பட்டிருக்கிறது. அதைப்போல, அந்தப் பையனின் உடலைப் பிரேதப் பரிசோதனைக்கு எடுத்துச் செல்வதற்கும் அவர்கள் மறுப்புத் தெரிவித்திருக்கிறார்கள். அதன் பிறகு எல்லா அதிகாரிகளும் சேர்ந்து அவர்களை சமாதானப்படுத்தி, உடலை எடுத்துச் சென்று நேற்று அந்த postmortem-ம் முடிந்திருக்கிறது.

நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களிடம் சொல்லக் கடமைப்பட்டிருப்பது, தனியார் தோட்டங்களிலே, தனியார் இடங்களில், அவர் சொன்னதைப்போல தோனிமுடியிலே எஸ்டேட் பகுதி 1, 2 என்ற இரண்டு இடங்களில்தான் நடந்திருக்கிறது. அந்தத் தனியார்களை நீங்கள் அறிவுறுத்த வேண்டும். அவர்கள் அந்தப் புதர்களையெல்லாம் அகற்ற

[திரு. என். செல்வராஜ்] [2010 ஏப்ரல் 30

வேண்டும். அதுமட்டுமல்லாமல், அதிகமான ஒளிவிளக்குகளை அந்தப் பகுதிகளில் அமைத்தால், ஒளிவிளக்கு இருந்தால், இரவு நேரங்களில் சிறுத்தைகள் நடமாட்டம் இருக்காது. எனவே, நீங்கள் அவர்களிடத்தில் சொல்ல வேண்டும். அதுமட்டுமல்லாமல், அது விரும்பிச் சாப்பிடுகின்ற உணவான கோழியோ அல்லது மட்டனோ ஞாயிற்றுக்கிழமைகளிலே பயன்படுத்திவிட்டு வீட்டுக்கு அருகிலே போட்டுவிடுகின்றார்கள். அதன் காரணமாகவே, அதைச் சாப்பிடுகின்ற நோக்கத்தோடு சிறுத்தைகள் அங்கே வருகின்றன. அதையும் அவர்கள் தவிர்த்திட வேண்டும். அதைப்போலவே, கழிப்பிடங்கள் இல்லாத காரணத்தால், இரவு நேரங்களில் மக்கள் அந்தப் பகுதிகளிலே காட்டிலே ஒதுங்குகின்ற நேரத்தில் அது அடித்துக் கொன்று விடுகின்றது. எனவே, தற்காப்பு நடவடிக்கையாக, தனியார் தோட்டம் வைத்திருப்பவர்களிடம் கழிப்பிடங்கள் கட்ட வேண்டும்; நல்ல ஒளி விளக்குகளை அமைத்துத் தர வேண்டும்; அதில் இருக்கின்ற அந்தப் புதர்களையெல்லாம் அகற்ற வேண்டுமென்று நீங்கள் அறிவுரை வழங்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் சொன்னதைப்போல, உங்களுடைய சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் பக்கத்திலேயே ஒரு கூண்டு வைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கூண்டிலே சிறுத்தைகளைப் பிடிப்பதற்காக நாய்களைக் கட்டினால், இயற்கை ஆர்வலர்கள் எல்லாம், நாய்களை நீங்கள் எப்படி பயன்படுத்தலாமென்று அதிலும் தகராறு செய்கிறார்கள். இப்படிப் பல்வேறு சூழ்நிலைகள் இருக்கிற காரணத்தால், நாங்கள் தொடர்ந்து கண்காணிப்போமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டம், வால்பாறை வட்டம், தோனிமுடி எஸ்டேட் பகுதியில், பாட்டனார் வீட்டிலே தங்கி, பால்வாடி வகுப்பிலே பயின்று வந்த திரு. பாபுகுமார் என்பவருடைய 5 வயது மகன் முகேஸ்வரன் மற்றும் அதே எஸ்டேட்டில் திரு. காந்தி என்பவருடைய மகன் மணிசங்கர் ஆகிய இருவரும் சிறுத்தைப் புலியின் பசிக்கு இரையாகி, வேட்டையாடப்பட்டு இறந்துவிட்ட செய்தியை மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. கோவை தங்கம் மற்றும் திரு. சி. ஞானசேகரன் ஆகிய இருவரும் கவன ஈர்ப்பாகத் தந்திருக்கின்றார்கள்.

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

2010 ஏப்ரல் 30] *[கலைஞர் மு. கருணாநிதி]*

இதுபற்றி நானும் விவரங்கள் சேகரித்திருக்கிறேன். வனத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே எடுத்துக்காட்டியதைப்போல—அந்தக் குடும்பங்களுக்குத் தலா 25 ஆயிரம் ரூபாய் வீதம் மொத்தம் 50 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என்று தெரிவித்திருக்கின்றார்.

இந்த உருக்கமான சம்பவம், கொடுமையான சம்பவம் தொடர்ந்து நடக்காமல் இருப்பதற்கும், எச்சரிப்பதற்கும் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவிப்பதோடு; கோவை மாவட்ட ஆட்சித் தலைவருடைய அறிக்கையைக் கேட்டிருக்கின்றேன்; அந்த அறிக்கையைப் பெற்று, அந்தச் சிறுவர்களுடைய குடும்பம் ஒவ்வொன்றிற்கும் தலா ஒரு இலட்சம் வீதம் மொத்தம் இரண்டு இலட்சம் ரூபாய் முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. *(குறுக்கீடு)* நன்றி சொல்கிறீர்களா? திரு. கோவை தங்கம். *(குறுக்கீடு)*

திரு. கோவை தங்கம்: ஆமாம், அப்படித்தான் சொல்வேன். *(குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது தேவையில்லாதது திரு. கோவை தங்கம், நீங்கள் நன்றி சொல்லுங்கள்.

திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறை தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களைப் பொறுத்தவரையில், 2006-லே ரம்யா என்கிற ஒரு குழந்தையை வில்லோனியில் சிறுத்தை அடித்துக் கொன்றது. உடனே, மாண்புமிகு முதலமைச்சர் ஐயா அவர்களிடமும் நான் அந்த போட்டோவைக் கொண்டு வந்து காட்டியபோது, மனம் வேதனை அடைந்து, வால்பாறையில் மக்களுக்கு 5 லிட்டர் மண்ணெண்ணெய்க்குப் பதிலாக 10 லிட்டர் மண்ணெண்ணெயை வழங்கினார்கள். தெரு விளக்குகளைப் பொறுத்தவரையில், நம்முடைய மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் 1,000 தெரு விளக்குகளுக்கு முதலில் அனுமதி கொடுத்தார்கள். அதனால்தான் இப்போது அங்கே சிறுத்தைப் புலி, யானைகளால் இறப்புகள் கொஞ்சம் குறைந்திருக்கின்றது. நான் சென்ற வாரம்கூட

[திரு. கோவை தங்கம்] [2010 ஏப்ரல் 30

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களிடம் இதுவிஷயமாக, அங்கு சிறுத்தைப் புலிகளாலும், யானைகளாலும் உயிர்ச் சேதம் ஏற்படுகிறது என்றும், அங்கே வால்பாறையைச் சுற்றிச் சுற்றி அவை வருவதாகவும் சொன்னேன். மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் உள்ளாட்சித் துறை மானியத்திலே பேசுகின்றபோது அறிவித்தார்கள். 300 தெரு விளக்குகள் உடனே கொடுத்தீர்களென்றால்தான், சிறுத்தைப் புலிகள், யானைகளால் வரக்கூடிய உயிர் ஆபத்துகள் தடுக்கப்படும் என்று சொன்னேன். அதை ஏற்றுக்கொண்டு, மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் நேற்றுகூட, உடனே ஏற்பாடு செய்வதாகச் சொன்னார்கள். ஆகவே, வால்பாறையைப் பொறுத்தவரையில் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் ஐயா அவர்கள் மிகுந்த அக்கறையோடு உதவி செய்து வருகிறார்கள் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி, அவருக்கும் நன்றி கூறி, மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களைப் பொறுத்தவரையில் அங்கே அடிக்கடி வந்து மேற்கொண்டு நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டு வருகிறார்கள் என்பதையும் தெரிவித்து, இந்த நேரத்திலே அவருடைய சிறப்பான பணிகளைப் பாராட்டி, அவருக்கும் நன்றி தெரிவித்து, அமர்கிறேன். வணக்கம்.

4. கவன ஈர்ப்பு

வேலூரைச் சுற்றி வட்டச் சாலை அமைக்க வேண்டியதன் அவசியம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன் அவர்கள் கீழ்க்காணும் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன் அவர்கள்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூரைச் சுற்றி வட்டச் சாலை அமைக்க வேண்டியதன் அவசியம்" குறித்து மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.